00135

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்
## இறுதிப் பரீட்சை - 2009
## செயற்பாட்டு முகாமைத்துவ அறிமுகம் - MCC 1105
## காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்

திகதி: 12.12.2009 நேரம்: 10.00 மு.ப – 12 மதியம்

**எவையேனும் நான்கு (4) வினாக்களுக்கு விடையளிக்குக.**
**அனைத்து வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.**
நிகழ்ச்சித் திட்டமிடப்படாத எண் கூட்டு இயந்திரங்களின் பாவனை அனுமதிக்கப்படும்

01.அ. செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான அறிவானது, எவ்வகையில், இலங்கையின் முயற்சியாண்மை அபிவிருத்திக்கு வழிகோலும் என்பதனை விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. உமக்கு நன்கு தெரிந்த ஒரு உற்பத்தியின், செயற்பாட்டு முறைமையை விளக்குக. உமது விடைக்கு ஆதாரமாக ஒரு பொருதத்தமான வரைபடத்தை உபயோகிக்குக. (13 புள்ளிகள்)

02.அ. உற்பத்தியாளருக்கு, வேறுபட்ட தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு, சந்தைப்படுத்தல் தொடர்பான தகவல்கள் அவசியமாகின்றது. உற்பத்தியாளருக்கு எவ்வகையான சந்தைப்படுத்தல் தகவல்கள் அவசியமாகின்றன என்பதை அடையாளங்கண்டு விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. ஏதாவது ஒரு பொருளை அல்லது சேவையைத் தெரிவு செய்து, அதனை நீர் எவ்வாறு வடிவமைப்பீர் என விளக்குக. (13 புள்ளிகள்)

03.அ. செயன் முறைத் திட்டமிடலின் படிமுறைகளை விளக்குக. ஏதாவது உற்பத்தியிலிருந்தான ஒரு உதாரணத்துடன் உமது விடையை விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. தளக்கோல அமைப்பானது, உற்பத்தயின் பல்வேறு நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒரு சிறந்த தளக்கோல அமைப்பில் எதிர்பார்க்கப்படும் பிரதான அம்சங்கள் எவை? (13 புள்ளிகள்)

04.அ. இலங்கையிலுள்ள முயற்சியாளர்கள் உற்பத்தித் திறனில் அதிக கவனம் செலுத்துகின்றனர். இலங்கையிலுள்ள முயற்சியாளர்களின் உற்பத்தித் திறனைப் பாதிக்கும் காரணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. சுரேன் உள்நாட்டுச் சந்தைக்காக சேட்களை உற்பத்தி செய்கிறார். ஒரு சேட்டை உற்பத்தி செய்வதற்கான பின்வரும் செலவுகள் தொடர்பான தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன. ஒரு சேட் உற்பத்திக்கான, செலவு மதிப்பீட்டு அட்டவணையைத் தயாரிக்கம் படி நீர் கேட்கப்படுகின்றீர்.

துணி – ஒவ்வொன்றும் ரூபா. 150/= பெறுமதியான 2 மீற்றர்.
பயன்படுத்தப்பட்ட ஊழியம் - 2 தையல் ஊழியர்கள். ஒவ்வொருவரும் 3.5 மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் ரூபா.35/= வீதம் கூலி வழங்கப்படுகின்றது.
ஒரு சேட்டுக்கான ஏனைய செலவுகள்
மின் - ரூபா. 40/=
சிறிய மூலப் பொருட்களும், ஏனைய உற்பத்தி செலவினங்களும் - ரூபா. 32/=
(12 புள்ளிகள்)

இ. 4 ஆ இல் கணிப்பிடப்பட்ட உற்பத்தி செலவுடன் 40 % இலாபம் சேர்க்கப்படுமாயின், விற்பனை விலை யாது? (03 புள்ளிகள்)

05. பின் வருவனவற்றில் ஏதாவது **ஐந்திற்கு (5)** சிறு குறிப்பு எழுதுக.
அ. செயற்பாட்டு முகாமைத்துவத்தின் வளர்ச்சி
ஆ. பொருள் பொறியமைத்தல் (Product Engineering)
இ. வேலை மதிப்பீடு (Work Measurement)
ஈ. உற்பத்தி திட்டமிடல்
உ. இருப்புக் கட்டுப்பாடு
ஊ. உற்பத்தியாளருக்கு, இணையத்தளத்தின் பயன்பாடுகள. (5x 5 = 25 புள்ளிகள்)